# அஞ்சலி

## தோழர் A.C.ஷா

BSNL ஊழியர் சங்கத்தின் குஜராத் மாநில முன்னாள் செயலாளரும், பல ஆண்டு காலம் அகில இந்திய துணைத்தலைவராக பல ஆண்டுகள் செயல்பட்டவருமான அருமை தோழர் A.C.ஷா டிசம்பர் 24ஆம் தேதி உடல் நலக்குறைவால் இந்தூரில் உள்ள ஒரு மருத்துவமனையில் இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஆரம்ப காலத்தில் குஜராத் மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நேரடியாக சென்று பல இன்னல்களுக்கும் இடையே BSNL ஊழியர் சங்கத்தினை உருவாக்கியவர் தோழர் A.C.ஷா. இன்றைக்கு குஜராத் மாநிலத்தில் BSNL ஊழியர் சங்கம் ஒரு பிரமாண்டமான சங்கமாக மாறுவதில் இவரது பங்கு பிரதானமானது. இவரது மறைவிற்கு தமிழ் மாநில சங்கம் தனது அஞ்சலியை உரித்தாக்கிக் கொள்கிறது.

## தோழர் பிரசன்ன குமார்

CITU சங்கத்தின் கர்நாடக மாநில பொது செயலாளர் தோழர் பிரசன்ன குமார் 23.12.2015 அன்று காலை மாரடைப்பின் காரணமாக உயிரிழந்தார். மிக இளம் வயதிலேயே மிகப்பெரிய பொறுப்பில் பணியாற்றிய தோழர் பிரசன்ன குமார் தனது 45ஆவது வயதிலேயே உயிரிழந்தது என்பது மிகப்பெரிய இழப்பாகும். BSNL ஒப்பந்த தொழிலாளர் சங்கத்தின் முக்கிய தலைவராக செயல்பட்ட தோழர் பிரசன்ன குமார், ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனைகளை தீர்வு காண பல போராட்டங்களை முன்னின்று நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது மறைவிற்கு தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தனது அஞ்சலியை உரித்தாக்கிக் கொள்கிறது.

## தோழர் P.ஜேசுதுரை

BSNL ஊழியர் சங்கத்தின் கோவை மாவட்ட தலைவராக பல ஆண்டுகாலம் சிறப்பாக செயல்பட்ட தோழர் P.ஜேசுதுரை அவர்கள் 27.12.2015 அன்று மதியம் காலமானார். E3(N) சங்கத்திலும், பின்னர் உருவான BSNL ஊழியர் சங்கத்திலும் பல ஆண்டுகாலம் மாவட்ட தலைவராக செயல்பட்டு பணி ஓய்வு பெற்று சென்ற தோழர் P.ஜேசுதுரை, தற்போது கோவை மாவட்ட AIBDPA சங்கத்தில் இணைந்து அங்கும் சிறப்பாக செயல்பட்டு வந்தார். அவரது மறைவிற்கு தமிழ் மாநில சங்கம் தனது அஞ்சலியை உரித்தாக்கிக் கொள்கிறது. அவரது பிரிவால் வாடும் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் தோழர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களை உரித்தாக்கிக் கொள்கிறோம்.